# இலங்கை தேசிய புத்தக அபிவிருத்தி சபை 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தேசிய புத்தக அபிவிருத்தி சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டுக் கொள்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆகஸ்ட் 26 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின் பின்னர் 2012 சனவரி 14 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது கல்வி அமைச்சின் கீழ் உள்ள இலங்கை தேசிய புத்தக அபிவிருத்தி சபையை அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

சபையை அகற்றுவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்தினை உள்ளடக்கி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டுக் கொள்கைகள் எதுவும் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இறுதி புத்தக இருப்பானது கொள்விலை அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியின் அடிப்படையில் கணக்குவைக்கப்பட வேண்டிய போதிலும் கொள்விலையில் 20% மற்றும் 50% கழிவின் கீழ் விற்பனை செய்யப்படுகின்ற சிறுவர் செயற்திட்டத்தின்

புத்தக இருப்புக்களும் கிரயத்தில் 9% கழிவில் விற்பனை செய்யப்படுகின்ற கங்ஹிதா I மற்றும் II புத்தக இருப்புக்களும் ரூபா 5,442,866 கிரயத்தில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) புத்தகங்களை கொள்வனவு செய்தல், அச்சிடல் மற்றும் விற்பனை செய்தல் சபையின் முக்கிய செயற்பாடான போதிலும் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் கிரயம், வருமானத்துடன் இணக்கம் செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படாது புத்தக கொள்வனவு மற்றும் விற்பனை பேரேட்டுக் கணக்குகளுக்கிடையே முறையற்ற விதத்தில் சீராக்கப்பட்டு வருடாந்த நிதி விளைவுகள் கணிப்பிடப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் யூன் மற்றும் ஆகஸ்ட் மாதங்களின் போது ரூபா 3,126,393 செலவினத்தில் அலுவலக சுற்றாடலை மேம்படுத்துதலும் மரத்தளபாடங்களின் கொள்வனவும் இடம்பெற்றிருந்த போதிலும் இதற்காக பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள “ புத்தக ஆலோசக சபையின் அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்கள்”, “சங்ஹிதா செயற்திட்டம் - II” “உள்ளுர் நூலகங்களின் விவரத்திரட்டு” மற்றும் “வனம் அழகானது” எனும் புத்தக இருப்புக்களின் கணக்குகளின் பிரகாரம் மீதி ரூபா 233,812 ஆகவும் இருப்புப் பதிவேட்டின் படியான மீதி ரூபா 450,414 ஆகவும் இருந்ததுடன் ஏனைய புத்தக இருப்புக் கணக்குகள் 05 உம் அம் மீதிகள் முறையே ரூபா 338,754 மற்றும் ரூபா 253,192 ஆக இருந்தன. இதன் படி அம் மீதிகள் கணக்கிணக்கம் செய்யப்பட்டிராத காரணத்தினால் இவை சரியென கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு வெளித்தரப்பினர்களுக்கு 1987 ஆம் ஆண்டிற்கும் - 1997 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வழங்கப்பட்ட ரூபா 166,005 தொகையான முற்பண மீதிகளை இன்றுவரை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1986 ஆம் ஆண்டிற்கு முன்னரிலிருந்து எவ்வித மாற்றமும் இல்லாமல் முன்கொண்டுவரப்பட்டுக் காணப்பட்ட ஐந்தொகையில் பொறுப்புக்களின் கீழுள்ள ரூபா 2,876,614 தொகையான இனங்காணப்படாத 2 மீதிகளை இனங்கண்டு தீர்த்த வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை வங்கியிலுள்ள ரூபா 200,000 தொகையான நிலையான வைப்புக்கள் தொடர்பாக பெறவேண்டிய வட்டிக்கணக்குகளில் பல ஆண்டுகளாக முன்கொண்டுவரப்பட்ட ரூபா 18,521 தொகையான மீதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட சிறுவர் புத்தக செயற்திட்டம்'', ''அச்சிடப்பட்ட பிரதிகளின் செயற்திட்டம்'' உள்ளடங்கலாக ஏனைய புத்தகங்களின் இருப்பில் ரூபா 9,092,361 தொகையான கணக்குகளின் படியான பெறுமதியினை பௌதீக உறுதிப்படுத்தல் அறிக்கையும் பட்டோலைகளும் இல்லாத காரணத்தினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2004 யூலை 29 ஆந் திகதிய | ஆண்டின் ஆரம்ப மீதி ரூபா 7,479,886 தொகையான நிலையான வைப்புக்களின் |

| | | |
|---|---|---|
| | பீஈடீ 25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | முதலீட்டிற்காக அமைச்சிற்குப் பொறுப்பான அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் நி.பி.104(1) | ரூபா 307,380 பெறுமதியான சேதமடைந்த 3595 புத்தகங்கள் பல வருட காலமாக சேதமடைவதற்கு இடமளிக்கப் பட்டிருந்ததுடன் இது தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு பொறுப்பு வாய்ந்தவர்களிடம் இருந்து அறவிடப்படு வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது முழு அளவும் வருமானத்தில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 321,381 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த 2010 ஆண்டிற்கான மிகை ரூபா 2,646,830 ஆக இருந்தது. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 2,968,211 தொகையான வீழ்ச்சி சுட்டிக்காட்டப்படுகின்றது. மீண்டெழும் செலவினத்திற்காக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 5,000,000 தொகையான அரசாங்க மானியம் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 5,500,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னைய ஆண்டிற்கான ரூபா 907,353 தொகையான புத்தக நன்கொடை செலவினம் ரூபா 4,762,094 வரை அதிகரித்தமையும், சேதமுற்ற புத்தகங்களுக்காக ரூபா 307,380 வருமானத்தில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தமையும் இந் நிதிவிளைவுகளில் வீழ்ச்சி தொடர்பாக விசேடமாகத் தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், ரூபா 1,231,244 தொகை செலுத்தப்பட்டுக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 59 காரியாலய மரத்தளபாடங்கள் இலக்கமிடப்பட்டு நிலையான சொத்துப் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டிராததுடன் இவற்றில் தேவைக்கு அதிகமான ரூபா 110,595 பெறுமதியான 03 நிறைவேற்று எழுதுவினைஞர் மேசைகளும் 03 கதிரைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

## 3.2 நிதிகளின் குறைந்த பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சபைக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 5,500,000 தொகை முழுவதும் செயற்பாட்டுத்திட்டமும் செயலாற்றல் மதிப்பீடோ இன்றி 2011 ஏப்ரல் 25 ஆம் திகதி அமைச்சினால் வங்கிக் கணக்கிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையின் சராசரி மாதாந்தப் பெறுவனவுகள், கொடுப்பனவுகள் மற்றும் சேமிப்புகள் முறையே ரூபா 1,246,760, ரூபா 662,985, மற்றும் ரூபா 8,066,225 ஆகக் காணப்பட்டதுடன் ஆண்டின் இறுதியில் சேமிப்புப் பண மீதி ரூபா 9,055,585 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், தேவைப்பாட்டிற்கு மேலாக அதிகளவு பணம் வங்கி நடைமுறைக் கணக்கில் விளைவற்று வைத்திருந்தமையால் நிறுவகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட ஏற்பாடு முறையாகப் பயன்படுத்தப்பட்டிராமையையே இதன் மூலம் தெளிவாகின்றது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2012 யூலை 12 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

சபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரையில் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

**5.3 செயற்பாட்டுத் திட்டம்**

2011 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 உள்ளகக் கணக்காய்வு**

உரிய வரிசை அமைச்சின் உதவியுடனேனும் உள்ளகக் கணக்காய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

சபையிடம் உள்ள காசு மீதி மற்றும் அரசாங்கத்தின் வருடாந்த ஏற்பாட்டின் கூட்டுத்தொகை ரூபா 15,030,142 ஆன போதிலும் அத்தொகை மீறப்படும் வகையில் ரூபா 23,304,068 பெறுமதிக்கு செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூபா 6,757,682 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டிராத காரணத்தினால் பாதீட்டினை நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படுவதற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் சபையின் தலைவருக்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஈ) திட்டமிடலும் பாதீட்டுக் கட்டுப்பாடும்
(உ) செயலாற்றல்